# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 07 03—04—1992 ( ஏப்பல். 03 — ஏப்ரல். 17 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### "அருள் ஊற்று"

கண்டி மறைவட்ட செய்திகளைத் தாங்கி "அருள் ஊற்று" எனும் மாதாந்த பத்திரிகை அங்கு கடந்த ஒன்பது மாதங்களாக வெளிவருகிறது. அதன் ஆசிரியரும் கண்டி மறைவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனருமாகிய அருள்திரு. நேரியோ ஆபிரகாம் பாஷையூரை பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரைம் சஞ்சிகை செய்தி ஊகத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது

# ரேகனோடு இரகசிய ஒப்பந்தம்?

# திருத்தந்தை மறுக்கிறார்

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி வெளியிடப்பட்ட ரைம் சஞ்சிகையின் அட்டைப்படத்தில் திருத்தந்தையினதும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகனினதும் படங்கள் தாங்கிய செய்தி ஒன்று வெளிவந்தது. அச்செய்தியை யாழ். பத்திரிகை ஒன்றும் பிரசுரித்திருந்தது. திருத்தந்தை அச்செய்தியை மறுத்துள்ளார்.

கொம்யூனிஸ்ற் நாடுகள் சிதைவடைவதை துரிதப்படுத்தும் முகமாக தாம் மறைமுறைமான ஒரு போராட்டத்தினை மேற்கொள்ளுவதாக திருத்தந்தையும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ரேகனும் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்திருந்ததாக, டைம் சஞ்சிகை வெளியிட்ட ஒரு செய்தியை திருத்தந்தை மறுத்துள்ளார்.

போலாந்தை மையமாகக் கொண்ட இந்த ஒப்பந்தம் 1982இல் செய்யப்பட்டதென இக் கட்டுரை கூறுகின்றது.

திருத்தந்தை ஆபிரிக்காவுக்குப் புறப்படுகையில் பத்திரிகையாளர் கேள்விகளுக்கு விடையளித்தபோது இதனை மறுத்துள்ளார்.

"இது பின் நடந்த நிகழ்வுகளை வைத்துக் கொண்டு முன் இப்படி நடந்திருக்க வேண்டுமென்ற ஒரு ஊகத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. இதில் ஒப்பந்தம் அல்லது உடன்பாடு இருந்ததென்று கூற முடியாது" என்று அவர் கூறினார்.

இது பற்றித் தமது கருத்தை வெளியிடுகையில் கொம்யூனிசத்தை ரேகன் எதிர்ப்பதற்கும் தாம் எதிர்ப்பதற்குமுள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டினார். "எனது எதிர்ப்பு மனித உரிமைகள் தொடர்பான சமூக - ஒழுக்கக் கொள்கைகள் பற்றியது எனது தாய் நாடான போலந்து பற்றிய விடயத்திலும் இதே கொள்கைதான் பின்பற்றப்பட்டது.

அக்காலத்தில் சொலிடாறிற்றி தொழிற்சங்கம் அநீதியாக நசுக்கப்பட்டது. அவ்வேளையில் நசுக்கப்பட்ட மக்களுக்காக திருச்சபை குரல் கொடுத்தது" எனத் திருத்தந்தை கூறினார்.

## கலைஞர்களுக்கு விருது

கத்தோலிக்க சமூகத் தொடர்பு நிறுவனமான ஓ. சி. ஐ. சி. தனது 20வது திரைப் படக்கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவை கடந்த மார்ச். 7 ஆம் திகதி கொழும்பில் நடத்தியது. பிரபல நடிகரும் பாராளுமன்ற உபசபா நாயகருமான காமினிபொன்சேகா இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராகச் சமூகமளித்திருந்தார்.

சமூக தொடர்பு ஆணைக் குழுவின் உபதலைவரான ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, ஓ. சி. ஐ. சி. யின் ஆசியப் பிரதிநிதி பிதா ஜோநாயுடு, சர்வதேசப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஷர்ஜி கருண் ஆகியோர் கௌரவ விருந்தினராக சமூகமளித்திருந்தனர்.

1991 ஆம் ஆண்டின் சிறந்த திரைப்பட நடிகராக ஜோ அபேவிக்கிரமவும். சிறந்த நடிகையாக அனோஜா வீரசிங்கவும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த திரைப்பட இயக்குநரான ஷெல்டன் பயகல, சிறந்த இசையமைப்பாளரான பிரேமசிறி கேமதாஸ ஆகியோரும் பிற கலைஞர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# யாழ். நகர் வந்த ஆயர்கள் குழு

## அறிக்கை வெளியிட்டுள்ளது





யாழ். வந்த கத்தோலிக்க தூதுக்குழுவில் சிலாப ஆயரும் முன்னாள் ஆயர் பேரவைத் தலைவருமாகிய பேரருள்திரு பிராங் மார்க்காஸ் பெர்னாண்டோ ஆண்டகையும், கண்டி மறைவட்ட ஆயர் பேரருள்திரு வியனி பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும் முறையே இருபடங்களிலும் உள்ளனர்.

தூதுக் குழுவினரில் துறவற சபை சிரேஷ்டர்களின் தலைவரும், தேசிய பொது நிலையினர் கழகத் தலைவரும் ஒரு அருட் சகோதரியும் இடம் பெற்றிருந்தனர்.

தூதுக்குழுவினர் மார்ச் 27 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு திரும்புவதற்கு முன்னர் தமது விஜயம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர். எங்கள் மூன்று நாள் விஜயத்தின்போது போரின் கொடுமைகளையும், அவற்றால் மக்கள் படும் இன்னல்களையும் காணமுடிந்தது. பொதுமக்கள் பலவழிகளாலும் துன்ப துயரங்களை அனுபவிக்கிறார்கள்.

எனினும் அவற்றின் மத்தியிலும் நம்பிக்கையான சமிக்ஞைகளைக் கண்டோம். கஷ்டங்களையும், துயரங்களையும் எதிர்கொண்டு தொடர்ந்து வாழவேண்டும் என்பதிலும், மீட்சி அடையவேண்டும் என்பதிலும் மக்கள் மன உறுதியுடன் இருப்பதை உணர முடிந்தது என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அன்புறவை வளர்ப்போம்**

# தவக்காலத்தில் செய்யக்கூடியது

### சிந்திக்க...

வீண் பேச்சுக்களால் குடும்பப் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளேன்.

சுய நலத்தால் குடும்பப் பிளவுக்கு காரணமாகியுள்ளேன்.

தப்பெண்ணங்களால் குடும்பங்களில் சந்தேகங்களை உண்டுபண்ணினேன்.

□ □ □ □

### செயற்பட...

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு குடும்ப ஒற்றுமைக்கு வழிவகுப்பேன்.

செபிக்கும் குடும்பம் — சிறந்த குடும்பம் என்பதை உணர்ந்து வாழ்வேன்.

அன்பும், தியாகமுமே குடும்ப நிலையைக் காக்கும் பண்புகள் என்பதை ஏற்று வாழ்வேன்.

## சீனாவில் கிறிஸ்தவம் தொடர்ந்து வாழ்கிறது

சீனாவில் கிறிஸ்தவசபைகள் தொடர்ந்து வாழ்கின்றன என அடிக்கடி சீனாவைத்தரிசிக்கும் புரொட்டஸ்தாந்து பாதிரியாரான வண. பிலிப் விக்கேரி தெரிவித்துள்ளார்.

மேற்குலகில் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்தமைக்கு மதங்களின் செல்வாக்கும் ஒரு காரணம் எனக் கருதும் சீனா இவ்விடயத்தில் எச்சரிக்கையாயிருக்கிறது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

# வளங்களைப் பகிர்தல்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இவ்வாண்டு தவக்காலச் செய்தியாக, வெளியிட்ட கருத்தானது எமது வளங்களைப் பகிர்ந்து புதிய உலகம் படைக்க அழைப்பு விடுக்கிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 5ஆம் திகதி யாழ். மறைவட்ட ஆலயங்களில் சேகரிக்கப்படும் காணிக்கை தவக்கால நிதியாகச் சேகரிக்கப்படுகிறது. வறியவர்களுக்கும், தேவைப்படுபவர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பதற்காக ஆண்டுதோறும் தவக்காலத்தில் நிதி சேகரிப்பு நடைபெறுகிறது.

சென்ற ஆண்டு எமது மண்ணில் பல்வேறு நிலைகளில் மக்கள் அல்லலுற்ற போதிலும் தவக்கால நிதிக்கு ஒரு கணிசமான தொகை கொடுக்கப்பட்டது என்ற செய்தி மகிழ்ச்சியூட்டுவதாக உள்ளது. இல்லாமை இயலாமையின் உச்சகட்டத்திற்குத் தள்ளப்பட்டிருந்த வேளையிலும் எமது மக்கள் தம்மிடமிருந்தவற்றைப் பகிர்ந்துகொள்ள முன்வந்தமைக்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

மனித முன்னேற்ற நடு நிலையமானது கத்தோலிக்க திருச்சபையின் சமூக சேவைப் பணியை மேற்கொள்ளும் அங்கமாகச் செயற்படுகின்றது. மனித முன்னேற்ற நடு நிலையத்தின் மூலம் பிரமாண்டமான முறையில் உயிர்காக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை அறியாதார் இலர். எமது மறைமாவட்டத்தில் ஏறத்தாழ அத்தனைபேரும் ஏதோ ஒரு விதத்தில் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் உதவியால் நன்மை பெற்றுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

பங்குத்தந்தையர்கள் மூலமாகவும், துறவற சபை முகவர்கள் மூலமாகவும் யாழ். மறைவட்டத்தில் கத்தோலிக்க திருச்சபை இந்த உதவி முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. மறைவட்டத்தில் திருச்சபை இத்தகைய பணிகள் புரிந்துள்ளமையை அறியாதவர்கள் பலர் இருக்கின்றார்கள். இதனைத் தெரியப்படுத்துவது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

திருத்தந்தையின் மையக் கருத்தையே மனித முன்னேற்ற நடுநிலையானது தனது தவக்கால கல்வி உதவித்திட்டத்தின் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. ''எமது வளங்களைப் பகிர்ந்து, புதிய உலகம் படைப்போம்'' என்ற வார்த்தைகள் அடங்கிய சுவரொட்டிகள் எமது ஆலயங்களை இந்நாளில் அலங்கரிக்கின்றன.

இந்த தவக்காலத்தில் வளங்களைப் பகிர்தலைப் பற்றிய சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களை வழிபாடுகளில் புகுத்துவதற்கு உதவியாக கைப் பிரதி நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, இவைபற்றிய விளக்கங்களைப் பங்குமக்களுக்கு எடுத்துக்கூறி மேலும் அறிவைப் பெருக்குவதற்கு தாமே நேரில் பங்குகளுக்கு தரிசனை செய்யவும் தயாராக இருப்பதாகவும், நடுநிலையம் தயாராக இருப்பதாகவும் அதன் இயக்குனர் பங்குத் தந்தையர்களுக்கு அறிவித்துள்ளார்.

''படைப்பு என்னும் மேசையில் உள்ளவற்றைப் பகிர அழைப்பு'' என்ற தலைப்பிலேயே திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் தவக்காலச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

படைப்பானது அனைவருக்குமே உரியது. முன்பு இருந்தவர்களுக்கும், இப்போது இருப்பவர்களுக்கும் இனி வரப்போகிறவர்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துஉணவைக் கொண்ட மேசை துர்அதிஷ்டவசமாக சொற்ப சிறுபான்மையினரின் கையில் உள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

கடவுளின் தாராண்மை நிறைந்த கைத்திறனும் மனித முயற்சியும் வியக்கத்தக்க செல்வங்களை உலகில் தோற்றுவித்திருக்கின்றன. அவற்றின் பயன்பாட்டில் எல்லா மக்களுக்கும் பங்கு இருந்தால்தான் அவை முழுநிறைவை அடையமுடியும் என்றும் திருத்தந்தை விளக்கியுள்ளார்.

# 1992 உலக இளைஞர் தினத்துக்கான திருத்தந்தையின் செய்தி



(குருத்தோலை ஞாயிறன்று கொண்டாடப்படுவது)


### கருத்து: உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள்


''உலகெங்கும்போய் நற்செய்தியை அறிவியுங்கள்'' (மாற்கு 16:15) என்பதே 1992 குருத்தோலை ஞாயிறன்று கொண்டாடப்படும் ஏழாவது உலக இளைஞர் தினத்துக்கான கருத்தாகும். திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் உலக இளைஞர்களுக்கு நவம்பர் 30ஆம் திகதி விடுத்தசெய்தியின் தமிழாக்கம்.

## ஜன்ஸா கோரா அற்புத வேளையை நினைவு கூர்கிறேன்

அன்பிற்குரிய இளைஞர்களே!

1. செஸ்டோசோவாவிலுள்ள ஜன்ஸா கோரா என்னும் திருத்தலத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆறாவது உலக இளைஞர் தினத்தை இறைவன் ஓர் அசாதாரணமான விதத்தில் ஆசீர்வதித்தார். அடுத்த தினத்துக்கான கருத்தை வெளியிடும் இவ்வேளையில் அந்த அற்புதமான வேளையை என் மனம் நினைவு கூர்கின்றது. அந்த உலக ஒன்றுகூடுதலானது திருச்சபைக்கு மட்டுமல்லாது மனுக்குலம் அனைத்திற்குமே கொண்டுவந்த ஆன்மீக பலன்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.





செஸ்டோசோவாவில் நாம் அனுபவித்த தூய ஆவியின் இறையூக்கம் எங்கும் பரவ வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன். மறக்கமுடியாத அந்நாட்களில் மரியாயின் திருத்தலமானது ஒரு புதிய பெந்தேகொஸ்துவுக்குரிய மேலறையாக விளங்கியது. அதன் கதவுகள் மூன்றாவது ஆயிரமாண்டைநோக்கித் திறக்கப்பட்டிருந்தன. மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த, இளமைபொருந்திய, அப்போஸ்தல ஆர்வம்கொண்ட ஒரு திருச்சபையை மீண்டும் உலகம் காணக்கூடியதாயிருந்தது.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எங்கணுமிருந்து முதன் முறையாக ஒன்றுகூடி, பரிசுத்த ஆவியினால் செபத்தில் ஒன்றுபட்டிருந்த அவ்வளவு இளைஞர்களையும் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன், அன்று வரலாற்றுச் சிறப்புள்ள ஒரு நிகழ்ச்சியைக் கண்டோம். மீட்பின் அளவற்ற பொருள் நற்செய்திப்பணியின் இயல்வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கிவைத்த நிகழ்வினைக் கண்டோம். இதில் இளைஞர் ஆற்றவேண்டிய பங்கு நிறைய உண்டு.

இப்போது 1992 ஏழாவது உலக இளைஞர் தினம் எம் முன்னே உள்ளது. இவ்வாண்டுக்குரிய கருத்தாக ''உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள்'' என்னும் கிறிஸ்துநாதரின் வார்த்தைகளைத் தெரிந்தெடுத்துள்ளேன். அப்போஸ்தலருக்குக் கூறப்பட்ட இந்த வார்த்தைகள், திருச்சபையின் மூலமாக ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்கும் உரியதாகும். இக்கருத்து சென்ற ஆண்டின் கருத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பதை இலகுவில் கண்டு கொள்ளலாம். எம்மை இறைவனின் மக்களாக்கிய அதே தூய ஆவி நற்செய்தி பரப்பும்படி எம்மைக் கட்டாயப்படுத்துகிறார். உண்மையில், கிறிஸ்தவனது அழைப்பானது ஒரு பணியைக் கொண்டுள்ளது.

கிறிஸ்துநாதர் எம்மிடத்தில் ஒப்படைத்த மறைப்பணி என்னும் பொறுப்பை நோக்கும்போது, திருச்சபையில் உலக இளைஞர் தினங்களின் அர்த்தமும் முக்கியத்துவமும் இன்னும் தெளிவாகத் தெரியும் இந்த ஒன்றுகூடுதல்களில் பங்குபற்றுவதன் மூலம் இளைஞர்கள் கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் தாம் அளிக்கும் ''ஆம்'' என்ற பதிலை உறுதிப்படுத்தி ''இதோ இருக்கிறேன். என்னை அனுப்பும்! '' (இசை. 6 : 8) என்ற இறைவாக்கினர் இசையாஸின் வார்த்தைகளை மீண்டும் கூற விழைகின்றார்கள், செஸ்டோசோவாவில் இடம்பெற்ற இறுதிச்சடங்கின் போது, நான் உங்கள் பிரதிநிதிகள் சிலரது கரங்களில் ஏற்றிய மெழுகுவர்த்திகளைக் கொடுத்து, கிறிஸ்துவின் ஒளியை உலகுக்குக் கொடுக்கும்படி சகல இளைஞர்களையும் அழைத்ததன் பொருள் இதுவேயாகும். ஆம், ''ஒளி மலை''யான ஜஸ்னா கோராவில் தூய ஆவி ஓர் ஒளியை ஏற்றினார். அது திருச்சபையினதும் முழு மனுக்குலத்தினதும் நம்பிக்கையின் அடையாளமாகும்.

2. தன்னியல்பிலேயே திருச்சபை ஓர் மறைபரப்பும் சமூகமாகும். (தி. ம. ப. 2) அது பெந்தேகோஸ்து தினத்தன்று பரிசுத்த ஆவியிடமிருந்து பெற்ற இந்த மறைபரப்பு உந்துதலினால் தொடர்ந்து இயக்கப்படுகிறது. ''பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று என் சாட்சிகளாயிருப்பீர்கள்.'' (அப். பணி 1:8) உண்மையில், திருச்சபையின் முழுப்பணியினதும் முக்கிய கர்த்தாவாக இருப்பவர் தூய ஆவியே. (மீட்பரின் பணி III)

இதன் விளைவாக கிறிஸ்தவ அழைத்தலும் மறைப்பணியையும், நற்செய்திப்பணியையும் மறைபரப்பையும் நோக்கியதாக அமைந்துள்ளது. ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் தமது சொந்தச் சூழலிலும் உலகிலும் அப்போஸ்தலராக விளங்கும்படி கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டுள்ளனர். ''என் தந்தை என்னை அனுப்பினது போல் நானும் உங்களை அனுப்புகிறேன்'' (அரு. 20:21) தமது திருச்சபையின் மூலம் கிறிஸ்துநாதர், மீட்பெனும் கொடையை பிறருடன் பகிர்ந்து கொள்ளுவதென்ற அடிப்படையான பணியை உங்களிடம் ஒப்படைக்கிறார். தமது அரசைக் கட்டியெழுப்புவதில் பங்குகொள்ளும்படி உங்களை அழைக்கிறார். உங்களை அன்புசெய்து உங்களில் நம்பிக்கைகொண்டுள்ளதால், உங்கள் ஒவ்வொருவருக்கும் பல குறைபாடுகள் இருந்தபோதிலும் உங்களைத் தேர்ந்தெடுக்கிறார்.

''கிறிஸ்துவின் அன்பு எம்மை ஆட்கொள்ளுகிறது'' (2கொரி. 5:14) என்ற புனித சின்னப்பரின் வார்த்தைகளுக்கமைய, கிறிஸ்துவின் இந்த நிபந்தனையற்ற அன்பே உங்கள் அப்போஸ்தலபணியின் ஆன்மாவாக இருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் சீடராக இருப்பதென்பது ஒரு தனிப்பட்ட விடயமல்ல, மாறாக, விசுவாசமெனும் கொடை பிறருடன் பகிர்ந்துகொள்ளப்படல் வேண்டும். இதனால்தான் அவ்வப்போஸ்தலர் ''நற்செய்தியை அறிவிப்பதுகூட நான் பெருமைப்படுவதற்குரியதன்று, அது என்மேல் சுமத்தப்பட்ட கடமையே, நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!'' (1கொரி. 9:16) என எழுதியுள்ளார். மேலும், விசுவாசத்தைப் பிறருக்குக் கொடுக்கும்போதுதான் அது உறுதிபெற்று வளர்கிறது என்பதை மறந்துவிடவேண்டாம். (மீட்பரின் பணி 2)


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# உலக இளைஞர்தினம் ஏப்ரல் 12

## செஸ்டோசோவா அனுபவம் ஓர் அறிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)



3. நீங்கள் பணிசெய்யுமாறு அழைக்கப்பட்டுள்ள மறைபரப்புப் பிரதேசங்கள், தூர நாடுகளில் அமைந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவை உலகின் எல்லா இடங்களிலும், நீங்களிருக்கும் நாளாந்த சூழலிற்கூடக் காணப்படலாம் மிகப்பழைமையான கிறிஸ்தவ பாரம்பரியமுள்ள நாடுகளில் புதிய நற்செய்திப்பணியின் மூலம் இயேசுவின் செய்தியை நோக்கிக் கவனத்தைத் திருப்ப வேண்டிய அவசிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. ஏனெனில் கிறிஸ்துவை அறியாத, அல்லது போதிய அளவு அறிந்திராத மக்கட்குழுக்கள் பரந்துபட்டு வாழ்ந்துவருகின்றன. உலகியல்சார்பான செயலமைவுகளிலும் சமயத்தின் மட்டில் அசட்டைத் தனத்திலும் சிக்குண்ட அநேகர் அவரிடத்திலிருந்து வெகுதூரத்திலிருக்கின்றனர்.

நண்பர்களே, அதே இளைஞர் உலகு இன்று திருச்சபையின் பணிக்களமாக விளங்குகிறது. இன்று இளைஞர் வாழும் சூழலில் தொல்லைதரும் பிரச்சினைகள் எவையென்பதை — மதிப்பீடுகளின் வீழ்ச்சி, ஐயப்பாடு, மட்டுமீறிய பொருட்பயன்பாடு, போதைப்பொருள், குற்றச்செயல்கள், சிற்றின்பச் சார்பு போன்றவை—எல்லோரும் அறிவர். ஆனால் அதே வேளையில் ஒவ்வொரு இளைஞருக்கும் இறைவன்மட்டில் ஓர் ஆழ்ந்த தாகமுண்டு. சில சமயங்களில் அசட்டைத்தனம் அல்லது விரோதம் என்னும் போர்வையின் பின்னால் அது மறைக்கப்பட்டும் இருக்கலாம். எத்தனை இளைஞர் தம்மை இழந்த, அதிருப்தியுற்ற நிலையில், தமது வாழ்வுக்கு இன்னும் ஆழ்ந்த, தெளிவான அர்த்தத்தைக் காணும்படிக்கு செஸ்டோசோவாவிற்கு வந்தனர்! தாம் திருமுழுக்குப் பெற்றிராத போதிலும், எத்தனைபேர் எவ்வளவோ தூரத்திலிருந்து–புவியியல் தூரம் மட்டுமல்ல–வந்திருந்தனர்! எத்தனையோ இளைஞர்களுக்கு செஸ்டோசோவா அனுபவம் ஒருவித முன் நற்செய்தி அறிவிப்பாகும்; ஏனையோருக்கு அது ஓர் இன்றியமையாத திருப்புமுனை. உண்மையான உளமாற்றத்துக்குரிய ஒரு சந்தர்ப்பமாகும்.

அறுவடையோ ஏராளம்! ஆனால் கிறிஸ்துவைத் தேடும் இளைஞர் அநேகர் இருப்பினும், நம்பத்தக்க விதத்தில் அவரை அறிவிக்க முன்வரும் அப்போஸ்தலர் மிகச் சிலராவர். அநேக குருக்கள், ஆசிரியர்கள், விசுவாசத்தையூட்டுவோர் தேவைப்படுகின்றனர். அத்துடன் மறைபோதக மனப்பாங்கினால் உந்தப்படும் இளைஞர்களும் தேவைப்படுகின்றனர். ஏனெனில் இளைஞர்கள்தான் இளைஞரின் முதல் மறையறிவிப்பாளர்களாக, அவர்களோடு நேரடித்தொடர்புடையவர்களாக, தாமே தம்மத்தியில் அப்போஸ்தலபணி புரிபவர்களாக இருக்கவேண்டும். விசுவாசத்தைப் பயிற்றுவதில் இது ஓர் அடிப்படைத் தத்துவம். இதோ, உங்கள் மாபெரும் பணி!

திருச்சபையில் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கு இன்றைய உலகம் எத்தனையோ சவால்களை முன் வைக்கலாம். குறிப்பாக, கிழக்கு ஐரோப்பிய மத்திய ஐரோப்பிய நாடுகளில் மார்க்ஸிய முறை வீழ்ச்சியடைந்தமையும், அதன் விளைவாக கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்கு எத்தனையோ நாடுகளின் எல்லைகள் திறந்துள்ளமையும் காலங்களின் ஒரு புதிய அறிகுறியாகும். இதற்குப் பொருத்தமான ஒரு பதிலை அளிக்குமாறு திருச்சபை அழைக்கப்படுகின்றது. இதே விதத்தில், வேறு பல நாடுகளில் இன்னும் இருக்கும் பல விதமான தடைகளை மேற்கொள்வதற்கு வழிவகைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. திருச்சபைக்கு இளைஞராகிய நீங்கள் அளிக்கக்கூடிய ஆர்வமும் முயற்சியும் இன்றியமையாதவை.

## கிறிஸ்துவைப்பற்றிப் பேசும் துணிவு வேண்டும்



4. கிறிஸ்துவை அறிவிப்பதென்பது எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவர் தமது வாழ்வால் அவருக்குச் சான்று பகர்வதையே குறிக்கின்றது. நற்செய்தியைப் போதிப்பதில் மிக எளிமையான முறை இதுவே! அதே சமயத்தில் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பயனுறுதியுள்ள முறையும் இதுவே தமது. சொந்த வாழ்வில், நாளாந்த அர்ப்பணத்தினாலும், ஒவ்வொரு உருப்படியான தீர்மானத்தையும் நற்செய்திக்கமையவே எடுப்பதினாலும் கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிப்படையாகக் காட்டுவதில் அடங்கியுள்ளது. இன்று உலகுக்குத் தேவைப்படுவது நம்பக்கூடிய சாட்சிகள். இளைஞர்களே! ஒருவரது நம்பத்தகும்நிலையைப் பெரிதும் நீங்கள், எவ்வகையான போலிவேடத்தையும் இயல்பிலேயே வெறுத்தொதுக்குகின்ற நீங்கள், இயேசுவுக்கு உண்மையான, தெளிவான சான்று பகரக்கூடியவர்களாவீர்கள்.

ஆகவே உலகில் உங்களுக்குள்ள ஈடுபாட்டின் மூலமும் உங்கள் விசுவாசத்திற்குச் சான்றுபகருங்கள். கிறஸ்துவினுடைய ஒரு சீடர் நிகழ்வனவற்றைப் பொறுத்தமட்டில் செயலற்ற, அசட்டையான பார்வையாளராக ஒருபோதும் இருப்பதில்லை. மாறாக அரசியல், சமூக பொருளாதார, கலாசார நிலைமைகளை புனரமைப்பது தனது பொறுப்பு என்பதை உணர்கிறார்.

மேலும், அறிவித்தல் என்றால் அறிவித்தல்தான்- அதாவது பிறருக்கு மீட்புச் செய்தியை அறிவிப்பவராதல். கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து அதிக அறியாமை இருந்துவருகிறது. அதேவேளையில் இறைவார்த்தையைக் கேட்பதில் ஆழ்ந்த ஆர்வமும் இருக்கின்றது. செவிமடுப்பதன் மூலமே விசுவாசம் பிறக்கின்றது. "அவர்கள் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டாலொழிய அவரை எவ்வாறு விசுவசிக்க முடியும?" (ரோமர் 10: 14) என்று புனித சின்னப்பர் எழுதுகின்றார். இளைஞர்களே! இறைவார்த்தையை அறிவிப்பது குருக்கள், துறவியரின் பொறுப்பு மட்டுமல்ல, அது உங்களது பொறுப்புமாகும். 'நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் பேசாமல் இருக்க எங்களால் இயலாது'' (அப். பணி 4: 20) என்று கூறிய அப்போஸ்தலரைப் போல் அதே பக்தியார்வத்தால் உந்தப்பட்டு உங்கள் குடும்பங்களிலும், நீங்கள் கல்வி கற்கும், தொழில் புரியும், பொழுதுபோக்கும் இடங்களிலும் கிறிஸ்துவைப்பற்றிப் பேசும் துணிவு உங்களுக்கு இருக்கவேண்டும். நீங்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கக் கூடாது. சில இடங்களில், சில சந்தர்ப்பங்களில் இறைவனின் வார்த்தையைக் கொண்டுவர உங்களால் மட்டுமே முடியும்.

கிறிஸ்துவை இன்னும் அறியாத ஒருவருக்கு அவரை அறிவிக்க அஞ்சவேண்டாம். மனித ஆளையும் அவனது விதியையும பற்றி எல்லாக் கேள்விகளுக்கும கிறிஸ்துவே உண்மையான முழுமையான பதிலாவார். கிறிஸ்து இல்லாவிட்டால் மனித் ஆள் ஒரு விடுவிக்க முடியாத புதிர். எனவே கிறிஸ்துவை அறிவிக்கத் துணிவுகொள்ளுங்கள். நிச்சயமாக, மனிதனது மனச்சாட்சிச் சுதந்திரத்தை மதிக்கும் விதத்தில், நீங்கள் இதைச் செய்ய வேண்டும், ஆனால் இதை நீங்கள் செய்தே ஆகவேண்டும். (மீட்பரின் பணி 39) வழியும் உண்மையும் வாழ்வுமான கிறிஸ்துவைக் கண்டுபிடிப்பதில் ஒரு சகோதரனுக்கு அல்லது சகோதரிக்குத் துணைபுரிவது உண்மையான பிறரன்புச் செயலாகும்.

இன்று இறைவனைப்பற்றிப் பேசுவது இலகுவான காரியமல்ல. பெரும்பாலும் அசட்டைத்தனத்தையும், ஓரளவு எதிர்ப்பையுங் கூட காணக் கூடியதாயிருக்கிறது. எத்தனையோ தடவைகளில் இறைவாக்கினர் எரேமியாவோடு சேர்ந்து "ஐயோ, ஆண்டவராகிய இறைவா, எனக்குப் பேசத் தெரியாது; நான் சிறு பிள்ளை!'' என்று கூறத் தோன்றும். ஆனால் "நான் சிறுபிள்ளை' என்று சொல்லாதே. ஏனெனில் நாம் யாரிடம் உன்னை அனுப்புகிறோமோ அவர்களிடம் நீ செல்வாய்'' என்று இறைவன் எப்போதும் விடையிறுப்பார். (எரே. 1: 6–7) ஆகவே நீங்கள் ஒடும்போதும் தனிமையில் இல்லை. இறைவன் தாம் வாக்களித்தபடியே உங்களுக்குத் துணைநிற்கத் தவறமாட்டார். "இதோ, நான் உலக முடிவுவரை, எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத். 28; 20)

## முதல் நற்செய்தி அறிவிப்பின் ஐந்தாம் நூற்றாண்டுக் கொண்டாட்டம்

5. ஏழாவது அகில உலக இளைஞர் தினத்தின் ஆய்வுப்பொருளானது மக்களினங்களின் வரலாற்றை, முக்கியமாக அவற்றுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்ட வரலாற்றைக் கவனிக்கும்படியும் எம்மை அழைக்கின்றது.

சில விடங்களில் இவ்வரலாறு மிகப் பழமையானது. ஏனைய இடங்களில் அது அண்மைக் காலத்தது, இளந் திருச்சபைகள் விசுவாசத்தில் வளர்ந்து, அனைத்துலக திருச்சபையின் ஆன்மீக முதுசொத்தை வளம் படுத்துவதில் ஓர் அற்புதமான இயற்றக்கால் உள்ளது.

உலக இளைஞர்களே! இத்தினத்தில் உங்கள் நாடுகளில் முதன் முதலாக கிறிஸ்துவின் சிலுவையை உயர்த்திய அப்போஸ்தலர், மறைபோதகரின் சிறப்புத்தன்மைகளின் மட்டில் விசுவாச ஒளியில் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன். அவர்களது முன்மாதிரியிலிருந்து எமது காலத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கு வேண்டிய ஆர்வத்தையும் துணிவையும் பெற்றுக் கொள்ள முயலுங்கள்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## "இறைவார்த்தைப் பணி"

அமலமரி தியாகிகளின் மகாநாடு எதிர்வரும் வைகாசி மாதம் நடைபெறவுள்ளது. அதற்கான சகல ஆயத்தங்களும் நடைபெற்று வருகின்றன. அ.ம.தி.களின் வாழ்வு, பணி பற்றிய ஆய்வுகள், கருத்தரங்குகள், கருத்துக்கணிப்புகள் என்றெல்லாம் இடம் பெற்று வருகின்றன.

"நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார்'' என்பதே அவர்களது விருதுவாக்கு. இதிலிருந்து "இறைவார்த்தைப் பணி'' யே அவர்களின் தனிச் சிறப்புப் பெற்ற அழைப்பு என்பது புலனாகின்றது. அமலமரித்தியாகிகள் பல்லாண்டுகளாக எம்மத்தியில் நவநாள் மறையுரைகள், குழு ஞானஒடுக்கங்கள், மகா ஞான ஒடுக்கங்கள், கருத்தரங்குகள் நடாத்தி, இறைவழியில் எம் வாழ்வை நெறிப்படுத்தி வருகிறார்கள். நடைபெறவிருக்கும் மகாநாட்டில் அவர்களின் 'இறைவார்த்தைப் பணி' யும் பரிசீலனைக்கு எடுக்கப்படவுள்ளது. அதற்கு ஆயத்தமாக தம் இப்பணியின் பலாபலன்கள், வழிமுறைகள், மாற்றுத் திட்டங்கள் பற்றிய பரிசிலனை

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ம. தொமஸ்
(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தர்)

அன்னை மடியில்
**24-08-1922**
அமலன் அடியில்
**16-04-1991**

உனை உருக்கி எமை வளர்த்த
ஐயாவே அன்புருவே!
உயிர் உள்ளவரை எம் நெஞ்சில்
நிலைத்திருக்கும் ஓவியமே!
ஆண்டாண்டு காலம்
ஆண்டவன் அடியினிலே
நீண்ட அமைதி நீர் பெறவே
வேண்டுகின்றோம்

உம் புதல்வர்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்புடன் நினைவுகூரும்
மனைவி பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
குமானாயங்குளம்,
அடம்பன்.

A/8/92

பாதுகாவலன்
PATHUKAVALAN

# ஜனாதிபதி அக்வினோ ராமோசை ஆதரிக்கிறார்

கருதினால் ஹைமே சின்னின் அறிவுரைக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலுக்கு பிடெல் ராமோசை சிபாரிசு செய்துள்ளார். தமது 59வது பிறந்த தினப் பூசையின் பின்பு அக்வீனோ இந்த விடயத்தை வெளியிட்டார். தமது குடும்பத்தினர், நண்பர்கள், சகாக்களது ஆலோசனையைக் கேட்டதுடன் இதற்காகச் செபித்த பின்னரே அக்வீனோ தாம் இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறினார்.

பிடெல் ராமோஸ் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் ஆட்சியின்போது தேசிய பொலீஸ் தலைவராயிருந்தார். 1986 கிளர்ச்சியில் தாமும் சேர்ந்து மார்க்கோஸை வீழ்த்துவதற்குக் காரணமாயிருந்தவர். அக்வீனோவின் அரசாங்கத்தில் [illegible]காப்பு அமைச்சராக இருந்தவர். இவர் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவராக இருந்தபோதிலும் பெரும்பாலான கத்தோலிக்கரின் வாக்குகள் தமக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கிறார்.

கருதினால் சின் எந்த வேட்பாளருக்கும் சிபாரிசு செய்யக்கூடாது என்று இவ்வருட ஆரம்பத்தில் அக்வீனோவுக்குக் கூறியிருந்தார்.

## 7வது இளைஞர் தினச் செய்தி

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மக்களுக்குக் கொண்டுவந்த விசுவாசமென்னும் கொடைக்காக நன்றி கூறும் அதேவேளையில், கிறிஸ்துவின் சிலுவை என்னும் அருஞ்செல்வத்தைதொடர்ந்து வருங்கால சந்ததியினருக்கு அளிக்கும் பொறுப்பை நீங்கள் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வீர்களாக.

இவ்வேளையில், முதல் நற்செய்தி அறிவிப்பின் ஐந்தாம் நூற்றாண்டை இவ்வாண்டில் கொண்டாடும் லத்தின் அமெரிக்க இளைஞர்களை விசேடவிதத்தில் ஊக்குவிக்க விரும்புகிறேன். முழுத் திருச்சபைக்குமே மிக முக்கியமானதான இந்நிகழ்வானது, இறைவன் உங்களுக்களித்த விசுவாசத்துக்காக அவருக்கு நன்றி கூறுவதற்கும், மூன்றாவது ஆயிரமாண்டின் ஆரம்பத்தில் புதிய நற்செய்திப்பணி விடுக்கும் சவாலை எதிர்கொள்வதில் உங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் ஏற்ற சந்தர்ப்பமாயிருக்கின்றது.

6. இச்செய்தியைப் பிரசுரிப்பதுடன், வரப்போகும் உலக இளைஞர் தினத்துக்கான ஓர் ஆன்மீக ஆயத்தப் பயணம் ஆரம்பிக்கின்றது இது குருத்தோலை ஞாயிறன்று உங்கள் ஆயர்கள் முன்னிலையில் உங்களை ஒன்றுசேர்க்கும்.

இந்தக் கொண்டாட்டம் சாதாரணமாக இருப்பதால் அதில் ஈடுபாடு குறைவாயிருக்கலாம் என்பது பொருளல்ல மாறாக, இப்பயணம் நற்செய்திப்பணிக்கும், அப்போஸ்தல உருவாக்கத்துக்கும் உண்மையான ஒரு பாடசாலையாக அமையும் படிக்கு, இளைஞராகிய உங்களையும், இளைஞர்களுக்கான பணியில் ஈடுபட்டுள்ளோரையும், இயக்கங்கள், சங்கங்கள் திருச்சபைக் குழுக்களுக்குப் பொறுப்பாயுள்ளோரையும் தமது முயற்சிகளைத் தீவிரப்படுத்தும்படி வேண்டுகிறேன்.

உண்மையான அப்போஸ்தல ஆர்வத்தால் தூண்டப்பெற்ற அநேக இளம் ஆண்களும் பெண்களும் தமது சொந்த நாட்டை விட்டு கிறிஸ்துவின் கிராட்சைத்தோட்டத்தில் ஊழியர் குறைவாக இருக்கும் இடங்களுக்குச் செல்ல ஆயத்தமாக குருக்களாகவும், துறவியராகவும், பொதுநிலையினராகவும் தமது வாழ்வை அர்ப்பணிப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இறைவனின் குரலொலிக்கு கவனமாகச் செவிசாயுங்கள். இராயப்பரையும் பெலவேந்திரரையும் அழைத்ததுபோல், இன்று உங்களை இடைவிடாது அழைத்துக் கொண்டிருக்கிறார். "என் பின்னே வாருங்கள்."

2000 ஆவது ஆண்டு அண்மிக்கும் இவ்வேளையில் ஒரு புதிய மறைபோதக முயற்சியின் அவசியத்தையுணர்ந்த திருச்சபை இப்பணிக்கு இளைஞர்களாகிய உங்களையே நம்பியிருக்கிறது இன்று திருச்சபையில் அப்போஸ்தல அர்ப்பண ஒளியை அநேகமாக ஏற்றி வரும் தூய ஆவியானவருக்கு நாள்தோறும் நன்றி கூற மறவாதீர்கள். இயக்காற்றலும், உயிர்த்துடிப்புமுள்ள பங்குக் குழுக்கள் இதன் வளமுள்ள விளைநிலமாகும் அதுபோன்றே விசேடமாக இளைஞரின் சூழலில் ஏராளமான அருங்கொடைகளுடன் வளர்ந்து பரவிவரும் சங்கங்களும் திருச்சபையின் இயக்கங்களும், பிற புதிய குழுக்களும் இதற்கேற்ற விளைநிலமாகும். பரிசுத்தஆவி எமது காலத்தவர்க்கு அளிக்கும் புதிய இறையூக்கம் இதுவே. இது உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஊடுருவ வேண்டுமென்பதே என் ஆவல்

1992 அகில உலக இளைஞர் தினக் கொண்டாட்டத்தை அப்போஸ்தலரின் இராக்கினியான மரியம்மாளின் கரத்தில் ஒப்படைக்கின்றேன். கிறிஸ்துவைப் பிறருக்கு அளிப்பதென்றால் அசாதாரண சாதனைகளைப் புரிவது அவசியமில்லை. இறைவன் மட்டிலும், தமது சகோதர சகோதரிகளின் மட்டிலும் உள்ளம் நிறைந்த அன்பு இருந்தால் போதும். இந்த அன்பானது விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு என்னும் விலை மதிப்பற்ற அருஞ்செல்வங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளு படி தூண்டும் என்பதை அவள் உங்களுக்குக் கற்பிப்பாள்.

ஏழாவது உலக இளைஞர் தினத்துக்கு ஆயத்தச் செய்கையில், இளைஞர்களே, எனது விசேட அப்போஸ்தல ஆசி உங்களுடன் இருப்பதாக.

24 நவம்பர் 1991 கிறிஸ்து அரசர் திருநாளன்று வத்திக்கானில் வெளியிடப்பட்டது.

பாப்பு
2 ஆம் அருள் சின்னப்பர்

## தவக்காலச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் கலைப் போட்டிகள்

மேற்படி 1992 ஆம் ஆண்டுக்கான கலைப்போட்டிகள் யாழ். சென். றோக்ஸ் இளைய தலைமுறைக் கழகத்தினால் நடாத்தப்பட விருக்கின்றன.

பேச்சு, கட்டுரை, கவிதை, பொது அறிவு, பசான், ஓவியம், சிறுகதை ஆகிய அம்சங்களுக்கிடையிலான போட்டிகள் இடம் பெறும். விண்ணப்பங்களும், சிறுகதை, ஓவியம் ஆகிய இரு ஆக்கங்களும் 05-04-1992க்கு முன்னதாக செயலாளர், சென். றோக்ஸ் இளைய தலைமுறைக் கழகத்திடம் கையளிக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்கட்கும் அங்கு தொடர்பு கொள்ளவும்.

# தவக்காலச் சிந்தனை

### மண்ணிடை வீழ்ந்த மீட்பர்

இரக்கத்திற் கிடமே இல்லா
ஈனரின் செயல்களங்கு
அரக்கரின் நிலையாய் நின்று
அனர்த்தங்கள் கூட்டிநிற்க
உருக்குலைந் துடல்கள் பிளந்து
உளமது சோர்ந்துபோக
மனுக்குலம் மீட்கவந்தோன்
மண்ணிடை வீழ்ந்தார் பாவம்.

நெஞ்சிடை இரக்கமற்ற
நீசரின் செயல்களாலே
துஞ்சியே துடித்துச் சோர்ந்த
துயரது காட்டும் சோகம்
அஞ்சியே ஒடுங்கி நின்று
அழுபவர் தானு முண்டாம்
வஞ்சகர் காட்டும் வெறியால்
வாடுவோர் இன்றுமுண்டாம்

என். சி. அருள் வரதன். (வளரும்)



## இறைவார்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், கருத்துக்கணிப்புகள், ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் ஒரு அங்கமாக இப்பணி பற்றிய பங்குத் தந்தையர், குருக்கள், கன்னியர், துறவிபருடைய மதிப்பீடுகள், கருத்துக்கள், ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

எனினும் எம் பங்குகளில் அவர்கள் பெரும்பாலும் பொதுநிலையினருக்கே போதித்து வருகின்றனர். எனவே அவர்களின் இறைவார்த்தைப் பணி பற்றிய பொதுநிலையினரின் கருத்துக்கள், மதிப்பீடுகள், ஆலோசனைகள் அதன் வளர்ச்சிக்கு, சீரமைப்பிற்கு இன்றியமையாதவையாகின்றன. இவற்றைப் பெறுவதற்கு கேள்விக் கொத்தொன்று தயாரிக்கப்பட்டு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவநாள் மறைஉரைகளால் மக்கள் பயனடைகிறார்களா? அல்லது அவை ஒரு சோடினையாக, ஒரு வழக்கமாக மாறிவிட்டனவா? இதற்குப் பதிலாக. குழுக் கருத்தரங்குகள், குழு ஞானஒடுக்கங்களுக்கு முக்கியத்துவம்கொடுத்தால் கூடிய பலன் கிட்டாதா? எம் பங்குகளில் மகா ஞானஒடுக்கங்கள் நடத்துவதன் வழியாக அதிக நன்மை அடைய முடியாதா? இன்றைய நவீன உலகில் அர்த்தமுள்ள முறையில் போதகப் பணியைத் தொடர புதிய வழிகள், மாற்றுத்திட்டங்கள் இல்லையா? இப்பணி சிறக்க பொதுநிலையினரின் ஆலோசனைகள் என்ன? இப்படியெல்லாம் வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

இக் கருத்துக்கணிப்பிலே பங்கெடுத்து, தங்கள் 'இறைவார்த்தைப்பணி' வளர, 'காவலன்' வாசகர்களின் ஒத்துழைப்பையும், உதவியையும் அ.ம.தி. கள் நாடி நிற்கின்றனர். விரும்பியவர்கள் தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளை எழுதி, பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

''இறைவார்த்தைப் பணி''
தொடர்பகம்,

## பேராலய பரிசுத்தவார திருவழிபாடுகள் 1992

**குருத்தோலை ஞாயிறு:- ஏப்றல் 12**
காலை 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி, ஆயரின் கூட்டுத்திருப்பலி
2ஆம், 3ஆம் திருப்பலிகள் காலை 8-00, மாலை 5-30

**பரிசுத்த வாரத்தின் திங்கள்:- ஏப்றல் 13**
மாலை 5-30 திருத்தைலம் மந்திரிக்கும் திருப்பலி

**பரிசுத்த வாரத்தின் வியாழன்:- ஏப்றல் 16**
மாலை 5 00 நற்கருணை வழிபாடு

**திருப்பாடுகளின் வெள்ளி:- ஏப்றல் 17**
காலை 6 30 சிலுவையின்சிந்தனை [பேராலயமுன்றலில்]
மாலை 3-30 வார்த்தை வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து, ஆசந்திப் பவனி

**புனித சனிக்கிழமை:- ஏப்றல் 18**
காலை 6-30 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு: ஏப்றல் 19**
காலை 5-30 திருப்பலி
காலை 6-30 ஆயரின் கூட்டுத்திருப்பலியும் பாப்பிறையின் ஆசீரும்.
2ஆம், 3ஆம் திருப்பலிகள் காலை 8-00, மாலை 5-30

யாழ். மரியன்னை பேராலயம் பங்குத்தந்தை

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஏப்றல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

**உன்பணி கிறிஸ்துவுக்கு சான்று பகர்வது**

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**